**விஷேட மாதிரி வினாத்தாள்- 2020**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சை**

**இஸ்லாம் - I,II** | **16** | **T** | **II** | **தரம் - 10**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக?

01. மறுமை வாழ்வுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய அகீதாப் பிரிவு எது?
1) அல் இலாஹிய்யாத். 2) அர்ரூஹானிய்யாத்.
3) அஸ்ஸம்இய்யாத் 4) அந்நுபுவ்வாத்

02. மூஸா (அலை) அவர்களுக்கு தவ்ராத் வேதம் அருளப்பட்டது போல நபி ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதம் எது?
1) புர்கான் 2) இன்ஜீல் 3) ஸபூர் 4) குர்ஆன்

03 நபி (ஸல்) அவர்கள் “ஈமானின் பாதியாகும்” எனக் குறிப்பிட்ட விடயம் எது?
1) சுத்தம் 2) அமல் 3) தக்வா 4) இஹ்லாஸ்

04 சிறு தொடக்கிலிருந்து சுத்தமாகும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
1) ஜபீரத் 2) தயம்மம் 3) உஸ்ல் 4) வுழு

05 இரத்தம் எந்த வகை நஜீஸில் அடங்கும்?
1) சாதாரண நஜீஸ் 2) இலகுவான நஜீஸ்
3) கடுமையான நஜீஸ் 4) இவை எதுவுமில்லை

06. பின்வருவனவற்றுள் தொழுகையின் பர்ளுகளுள் அடங்காத ஒரு செயற்பாடு எது?
1) தக்பீர் சொல்லல் 2) கைகளைக் கட்டுதல்
3) சூரா பாதிஹா ஓதுதல் 4) நிய்யத் வைத்தல்

07. நபி (ஸல்) அவர்களுக்கு வஹி அருளப்பட்டதும், அது பற்றி விளக்கம் பெறுவதற்காக கதீஜா (ரழி) அவர்கள் யாரிடம் அழைத்துச் சென்றார்கள்
1) அபூ லஹப் 2) அபூபக்கர் (ரழி)
3) வரகாபின் நவ்பல் 4) ஹுதைபா அல்யமானி.

08. அல்-குர்ஆன் அருளப்பட்ட ஒழுங்கை எவ்வாறு அழைக்கப்படும்
1) குத்தபுல் வஹி 2) தர்தீப் திலாவத்
3) முஸ்அப் 4) தர்தீப் நுஸுூல்

09. பராக்கிரம சமுத்திரம் பார்வையிடுவதற்காக கொழும்பிலிருந்து சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்களை ஆசிரியர் ளுஹர் நேரத்தில் அஸரையும் சேர்த்துத் தொழுமாறு பணித்தார். இத்தொழுகை எவ்வாறு அழைக்கப்படும்?
1) கஸ்ரு 2) ஜம்உ 3) ஜம்உ தக்தீம் 4) ஜம்உ தஃகீர்

10. ருகுஉ, சுஜூது இடம் பெறாத ஒழு தொழுகை எது?
1) ஜனாஸாத் தொழுகை 2) மழை வேண்டித் தொழுதல்
3) கிரகனத் தொழுகை 4) ளுஹர் தொழுகை

11. ஜாஹிலிய்ய சமூகத்தில் கோத்திரங்கள் விழா எடுத்துக் கொண்டாடப்பட்ட இரு தரப்பினரும் யாவர்?

1) ஷைகு, கவிஞர்கள்
2) ஆண் குழந்தைகள், கவிஞர்கள்
3) பெண் குழந்தைகள், கவிஞர்கள்
4) கற்கள், ஒட்டகைகள்

12. இஸ்லாத்துக்கு முற்பட்ட கால குடும்ப அமைப்பில் காணப்பட்ட தற்காலிக மண முறை எவ்வாறு அழைக்கப்படும்?

1) நிகாஹ் ஸஹீஹ்
2) அஸபிய்யா
3) கபீலா
4) முத்ஆ

13. அகபா உடன்படிக்கையைத் தொடர்ந்து யஸ்ரிபுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நபித் தோழர் பெயர் என்ன?

1) ஸைதிப்னு ஸாபித் (ரழி)
2) முஆதிப்னு ஜபல் (ரழி)
3) முஸ்அப் இப்னு உமைர்
4) ஸல்மானுல் பாரிஸி (ரழி)

14. பின்வரும் அட்டவணையில் “அ” நிரலுக்கேற்ப “ஆ” நிரலை சரியாக ஒழுங்கு படுத்தும் போது பொருத்தமாக அமையும் விடையினைத் தெரிவு செய்க?

| அ | ஆ |
|---|---|
| 1. மதீனா<br>2. எதியோப்பியா<br>3. மு.ஃஜிஸாத்<br>4. ஒப்புவமை காணல் | A. நபிமார்கள்<br>B. கியாஸ்<br>C. யஸ்ரிப்<br>D. ஹபஷா |

1) CDAB
2) CABD
3) ABCD
4) BCAD

15. ஷிர்க் என்பது “இணைவைத்தல்” என்பது போல் ரித்தத் என்பது எதனைக் குறிக்கும்?

1) நாஸ்திகம்
2) நயவஞ்சகம்
3) மதம் மாறுதல்
4) நிராகரிப்பு

16. கியாஸின் போது காணப்படும் பொதுத்தன்மை எவ்வாறு அழைக்கப்படும்?

1) அஸ்ல்
2) பர்உ
3) இல்லத்
4) ஹுகும்

17. “ஸீரத் ரஸூலுல்லாஹ்” எனும் நூலை எழுதிய அறிஞரின் பெயர் என்ன?

1) சித்தி லெப்பை
2) இமாம் கஸ்ஸாலி
3) இமாம் ஷாபிஇ
4) முகம்மத் பின் இஸ்ஹாக்

18. “உண்ணுங்கள் பருகுங்கள் எனினும் அவற்றில் அளவு கடந்து வீண் விரயம் செய்யாதீர்கள்” எனும் கூற்று பின்வருவனவற்றுள் எதனைச் சார்ந்ததாகும்?

1) அல்-குர்ஆன்
2) அல்-ஹதீஸ்
3) அறிஞர்கள்
4) வலிமார்கள்

19. பூமியை வளப்படுத்தும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

1) இபாதத்
2) இமாரத்
3) கிலாபத்
4) கியாதத்

20. பின்வருவோரில் “அஜ்னபி” ஆனவர் யார்?

1) மகனின் மனைவி
2) சகோதரியின் புதல்வி
3) மனைவியின் தாய்
3) மாமியின் மகள்

21. பின்வரும் கூற்றுக்கள் சம்பந்தமாக சரியான விடையைத் தெரிவு செய்க

A. இஜ்திஹாத் என்பதின் கருத்து முயற்சித்தல் என்பதாகும்.

B. இஸ்லாத்தில் சமாதானம் விதியாகவும், போர் விதிவிலக்காகவும் உள்ளது.

C. அல்-குர்ஆன் 13 வருடங்களாக அருளப்பட்டது.

D. இஸ்மத் என்பது நபிமார்களின் பண்பாகும்.

1) A,B மாத்திரம் சரியானது 2) B,C மாத்திரம் சரியானது

3) A,B,D மாத்திரம் சரியானது 4) A,B,C மாத்திரம் சரியானது

22. கல்புல் குர்ஆன் என அழைக்கப்படும் சூரா எது?

1) பகரா 2) யாஸீன் 3) கஹ்பு 4) பாத்திஹா

23. குரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக அரசு ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளது. இந்த நேரத்தில் அதான் கூறப்பட்டதும், முஜிப், பள்ளிவாசலை நோக்கி ஜமாஅத் தொழுகைக்காக விரைந்து சென்றார். இச்செயலை எவ்வாறு கருத முடியும்.

1) முஜிப் பேணுதல் மிக்க ஒரு மனிதனாகும்.
2) அவர் கழாகத்தை பலமாக நம்புபவர்.
3) அவர் சட்டத்தை மீறி செயற்பட்டவர்.
4) அவர் 27 மடங்கு நன்மையைப் பெற்றுக்கொண்டவர்.

24. பின்வரும் சொற்றொடர்களுள் மறுமையுடன் ெடர்பானவற்றைத் தெரிவு செய்க.

A – மஹ்ஷர் B - ஹிஸாப் C – ஸிராத்

D – ரிழா E – வரஉ F – கியாம்

1) A B C D 2) A C E F 3) A B C F 4) A B D E

25. தயம்முமின் உறுப்புக்களின் எண்ணிக்கை யாது?

1) 2 2) 3 3) 4 4) 5

26. உமது நண்பனின் வீட்டுக்குச் சென்ற போது, அங்கிருந்த நாய் உமது உடையில் உமில்நீரை விட்டு. இதனை சுத்தம் செய்ய மிகப் பொருத்தமான முறை என்ன?

1) சலவைத்தூள் இட்டுக்கழுவினால் போதுமானது.

2) ஏழு முறை நீர் ஊற்றிக்கழுவினால் போதுமானது.

3) மண்கரைசல் இட்டு ஒருமுறை கழுவுதல் போதுமானது.

4) கழுவாது நீரைத் தெளித்தால் நஜீஸ் நீங்கிவிடும்.

27. தொழுகையின் போது நாம் “ இய்யாக ந.்.புது வஇய்யாக நஸ்தஈன்” என்று ஓதுகின்றோம். இதன் கருத்து யாது?

1) இறுதி நாளின் அதிபதி.

2) உன்னையே வணங்குகின்றோம், உன்னிடமே உதவி தேடுகின்றோம்.

3) எமக்கு நேர்வழியைக்காட்டுவாயாக

4) அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்.

28. தனது மகனை குர்பான் செய்வதாக கனவு கண்ட நபியின் பெயர் என்ன?

1) இஸ்மாயில் (அலை) 2) இப்றாஹிம் (அலை)

3) ஸாலிஹ் (அலை) 4) நூஹ் (அலை)

29. குல்லதைன் நீரின் ஆகக்குறைந்த அளவு லீற்றரில் எத்தனை லீற்றர்களாகும்?

1) 200L 2) 100L 3) 110L 4) 210L

30. இஸ்லாமிய அகீதாவைப் பாதுகாப்பதற்கு உழைத்த அறிஞர்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?

1) இமாம் ஷாபிஈ (ரஹ்), இமாம் ஸுஹ்ரி (ரஹ்), இமாம் மாலிக் (ரஹ்)

2) இமாம் அபூ ஹனீபா (ரஹ்), இமாம் அஹ்மத் (ரஹ்), இமாம் நவ்வி (ரஹ்)

3) இமாம் அஹ்மதிப்னு ஹம்பல் (ரஹ்), இமாம் அஷ்அரி (ரஹ்), இமாம் மாதுருதி (ரஹ்)

4) இமாம் அஷ்அரி (ரஹ்), இமாம் மாதுருதி (ரஹ்), இமாம் ஸுஹ்ரி (ரஹ்)

(30x1=30புள்ளிகள்)

## இஸ்லாம் - ii

1. இஸ்லாமிய அகீதா விடயத்தில் வழி கெட்ட பிரிவினராகக் கருதப்படும் இரு பிரிவினரைக் குறிப்பிடுக?
2. நீரின் இரு வகைகளைப் பெயரிடுக?
3. இபாதத்களின் இரு பிரிவுகளைப் பெயரிடுக?
4. முதல் அத்தஹிய்யாத், கடைசி அத்தஹிய்யாத் என்பவற்றுக்கான அறபுச் சொற்கள் யாவை?
5. இஜ்மாஉவின் வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக?
6. வியாபாரத்திற்கான அடிப்படைகள் இரண்டை எழுதுக?
7. நப்ஸின் இரு வகைகளைக் குறிப்பிடுக?
8. வஹியின் இரு வகைகளையும் எழுதுக?
9. அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ எனப்படுவோர் யார்?
10. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் இரண்டைத் தருக?

(10x2=20புள்ளிகள்)

## விடைகள் - இஸ்லாம் - i

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. 3 | 2. 2 | 3. 1 | 4. 4 | 5. 1 | 6. 2 |
| 7. 3 | 8. 4 | 9. 3 | 10. 1 | 11. 2 | 12. 4 |
| 13. 3 | 14. 1 | 15. 3 | 16. 3 | 17. 4 | 18. 1 |
| 19. 2 | 20. 4 | 21. 3 | 22. 2 | 23. 3 | 24. 3 |
| 25. 1 | 26. 3 | 27. 2 | 28. 2 | 29. 4 | 30. 3 |

## விடைகள் - இஸ்லாம் - ii

1. ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜிஆ, மு∴தஸிலா

2. மிகச் சுத்தமான நீர், சுத்தமானவை கலந்த நீர், அசுத்த நீர்.

3. அடிப்படையான, வரையறுக்கப்பட்ட இபாதத்

அன்றாட வாழ்வோடு தொடர்பான இபாதத்கள்

4. இப்திராஷ், தவர்ருக்

5. இஜ்மாஉஸ்ஸரீஹ், இஜ்மாஉல் அக்ஸரிய்யா, இஜ்மாஉஸ்ஸுகூதி

6. வாங்குவோர், விற்போர், வியாபாரப் பொருள், ஈஜாப்-கபூல்

7. நப்ஸுல் அம்மரா பிஸ்ஸு∴, நப்ஸுல்லவ்வாமா, நப்ஸுல் முத்மஇன்னா

8. வஹி மத்லூவ்வு, வஹி கைரு மத்றுவ்வு

9. நபி (ஸல்) அவர்களது தோழர்களும் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் தமது வாழ்வை அமைத்துக் கொண்டார்களோ, அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தமது வாழ்வை அமைத்துக் கொண்டோர்.

10. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் உயிர் வாழ்வதற்கான உரிமை, சமத்துவத்துக்கான உரிமை, தனி மனித சுதந்திரத்திற்கான உரிமை, நீதி பெறுவதற்காக உரிமை…. இவை போன்ற இரண்டு